16.04.2021 அசல் வழக்கு எண். 460/2013

வா.சா.1

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது. இந்த வழக்கில் 2ம் வாதி என்னுடைய தம்பி. நான் 2ம் வாதிக்கும் சேர்த்துத்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கூலி வேலை செய்கிறேன். என்னுடைய தாத்தாவின் பெயர் சாமிரெட்டியார் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு மாசிலாமணி மற்றும் பெருமாள் என்ற இரண்டு ஆண்மகன்களும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். நான் பெருமாளுடையை மகன் பிரதிவாதி மாசிலாமணியின் மகன் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் சர்வே எண்.762/5/பி ஆகும். என் தாத்தாவிற்கு கொரட்டூர் கிராமத்தில் மிகுதியான சொத்துக்கள் இருந்ததா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது கொரட்டூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் தாவா சொத்தானது ஆதியில் என் தாத்தாவின் பெயரில் இருந்ததற்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணம் எதிர்தரப்பினரின் ஆட்சேபனையுடன் சிட்டா அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணம் எதிர்தரப்பினரின் ஆட்சேபனையுடன் சிட்டா அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ஆவணம் எதிர்தரப்பினரின் ஆட்சேபனையுடன் சிட்டா அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 38 என்றால் சரிதான். அதில் 22 சென்ட் சாலைக்காக நெடுஞ்சாலைத்துறை கையகப்படுத்தியுள்ளது என்றால் சரிதான். 38 சென்ட்டும் என் தாத்தாவிற்கு சொந்தமானது என்றால் சரிதான். என் தாத்தா அவருடைய இரண்டு மகன்களுக்கும் சொத்தை பிரித்து எழுதி வைத்தாரா என்றால் இல்லை. என் தாத்தா உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. என் தாத்தா எழுத்துமூலமாக அவருடைய சொத்தை அவருடைய குழந்தைகளுக்கு எழுதிக்கொடுத்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது அவர் இறக்கும் போது நான் பிறக்கவில்லை. என் அப்பாவும் என்னுடைய பெரியப்பாவும் என் தாத்தாவின் சொத்தை எழுத்து மூலமாக பிரித்துக் கொண்டார்களாக என்றால் எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. என் பெரியப்பா வாய்மொழியாக அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை வேறு ஒரு நபருக்கு விற்றுவிட்டார் என்றால்

சரிதான். ஆவண எண்.991/1958 என்ற ஆவணத்தின் மூலம் தான் என் பெரியப்பா அந்த சொத்தை பெற்றதாக என்னுடைய வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நானும் என் அப்பாவும் பயிர் செய்து வந்தோம். என் அப்பா ஒவ்வொரு முறையும் பயிர் செய்யும் போது மாசிலாமணிக்கு ஒரு பங்கு அளிப்பாரா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்காக நான் கட்டிய வரி ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு தெரியாது. நானும் என்னுடைய சகோதரரும் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் ஆனால் அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மொத்தம் 16 சென்ட்டில் நானும் 2ம் வாதியான என்னுடைய சகோதரரும் ஆளுக்கு 8 சென்ட்டாக பிரித்துக்கொண்டோம். என்னுடைய சகோதரர் 1263 சதுர அடியை சீதாலட்சுமி என்பவருக்கு 2020-ம் வருடம் விற்றுவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் விற்றப்பிறகு தான் தெரியும் எவ்வளவு சதுர அடி என்று எனக்கு தெரியாது. என் சகோதரர் சீதாலட்சுமிக்கு விற்ற ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கானது 16 செட்ன்டுக்கு பிரதிவாதிகள் தொந்தரவு செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன் அதில் ஒரு பகுதியை என் சகோதரர் விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

(பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை செய்வதற்க்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)